மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த அந்த நகராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் வரியை ரத்து செய்ய வேண்டும் என்கிற போது அதனுல் இழப்பு ஏற்படக் கூடியதை சமாளித்துக் கொள்ளும் அளவுக்கு அவற்றுக்கு வருமானம் இருக்கிறதா என்பது தனியாகப் பரிசீலிக்கப்பட்டே நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 900 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். கேள்வி எண் 901.

வணிக வரி மூலம் வருவாய்.

***901 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1956-57-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுக்கு வணிக வரி இலாகா மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு?

(இ) 1971-72- அந்தத் துறை மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) 1956-57-ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கு வணிக வரி இலாகா மூலம் கிடைத்த வருமானம் ரூ. 1,261.33 லட்சமாகும்.

(இ) 1971-72-ல் பிப்ரவரி திங்கள் 29-ம் நாள் முடிய அந்தத் துறை மூலம் கிடைத்த வருமானம் ரூ. 9,601.04 லட்சமாகும்.

DR. H. V. HANDE : Sir, do the Government think that this is a fabulously huge amount that they have collected, eight times the amount they collected in 1956–57, and if so, whether it is possible for them to see that the sales tax does not go on increasing at geometrical progression in the years to come and also whether it is possible for them to fix some sort of ceiling so that this particular source of revenue is not unduly tapped and persons are put to a lot of harassment?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் விளக்கியிருக்கிறேன். வருமான வரி இலாக்கா மக்களைக் கசக்கிப் பிழிவதனுலும், அதிகமான அளவுக்கு வரியை உயர்த்திக் கொண்டு போவதனுலும் இந்த வருமானம் உயரவில்லை. நாட்டில் உற்பத்தி பெருகி, பலவகையிலும் மக்களுடைய வாங்கும் சக்தி அதிகரித்து, வியாபாரம் பெருகி இருப்பதன் காரணத்தினுல்தான் வருமானம் பெருகியிருக்கிறது என்பது

1972 ஏப்ரல் 6]

ஒன்று. இரண்டாவது பல ஆண்டுகளாக விற்பனை வரி கட்டாமல் ஏய்த்துக் கொண்டிருந்தவர்களைக் கண்டு பிடித்து வரி வசூல் செய்வதனாலும் பெருகி இருக்கிறது.

திரு. நா. வீராசாமி : வணிக வரி இலாக்காவினர் 56-57-இல் செயல்பட்டதை விட வேகமாக எல்லாத் துறைகளிலும் கடுமையாக வரி வசூல் செய்கிற காரணத்தினால்தான் வரி பெருகியிருக்கிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கண்டிப்பாக என்பது கூடச் சரியில்லை. வசூலாகாமல் இருக்கிற பாக்கிகள் அதிகமாக இருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் அவற்றையும் சேகரித்துக் கொடுப்பேன். வரி ஏய்ப்பவர்களைக் கண்டுபிடித்து வசூலிப்பதனால் பெருகியிருக்கிறது. மற்றொன்று எல்லாத் துறைகளிலும் வியாபாரம் பெருகி வந்திருக்கிறது என்பதுதான் தாத்பர்யம்.

திரு. கே. எ. வகாப் : இப்படி 96 கோடி ரூபாய் பலமுனை வரி விதிப்பின் மூலம் வசூலாகி யிருக்கிறது என்று நினைக்கிறேன். பலமுனை வரியினால் பல விதமான தொல்லைகள் மக்களுக்கும், வியாபாரிகளுக்கும் ஏற்படுகின்றன என்ற காரணத்தினால்—வர்த்தகச் சமூகத்தினர் 100 கோடிக்குத் தரத் தயாராக இருந்தால் ஒரு முனை வரியாக விதிக்க அரசு முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதன் மூலம் 106 கோடி ரூபாய் வரும் என்று ஏற்கனவே கணக்கு எடுத்திருக்கிறோம். இந்த 96 கோடி ரூபாய் விற்பனை வரி மூலம் மட்டும் வந்ததாக எண்ணக் கூடாது. தமிழ்நாடு ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் மூலம் 6,390 லட்சம். சென்டிரல் சேல்ஸ் டாக்ஸ் மூலம் 1,606 லட்சம். தமிழ்நாடு மோட்டார் ஸ்பிரிட் டாக்சேஷன் ஆக்ட் மூலம் 796 லட்சம். தமிழ்நாடு எண்டர்டெயின்மென்ட் ஆக்ட் மூலம் 442 லட்சம். தமிழ்நாடு லோக்கல் அந்தாரிட்டி பினான்ஸ் ஆக்ட் மூலம் 416 கோடி. தமிழ்நாடு பெட்டிங் டாக்ஸ் ஆக்ட் மூலம் 149 லட்சம். இவை எல்லாவற்றையும் சேர்த்துத்தான் 96 கோடி சொச்சம் ஆகும்.

அரிசன மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்கள்.

***900 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், அரிசன நலப் பள்ளிகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகம், சிலேட்டு கொடுக்க அரசு 1967-68-ம் ஆண்டிலும், 1971-72-ம் ஆண்டிலும் முறையே செலவழித்த தொகை எவ்வளவு?